O.S. No: 136/2019

பெயர் :கலைமணி

**வா.சா.1**

04-11-2024

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கில் நான் ராஜுவின் பவர் ஏஜெண்ட் என்றால் ஆமாம் . இந்த வழக்கு சம்மந்தப்பட்ட விவரங்கள் ராஜுவிற்கு தான் நன்றாக தெரியும் என்றால் எனக்கும் நன்றாக தெரியும். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. உடன் இருந்தேன். அந்த பத்திரம் 10 வது மாதம் 2018 ஆம் வருடம் 17 ஆம் தேதி எழுதப்பட்டது . அந்தயிடத்தின் சுவாதீனம் ஒப்படைக்கவில்லை . இன்றைய தேதிவரை பிரதிவாதி தான் குடியிருக்கிறார் . அந்த பத்திரம் கும்பகோணத்தில் ராஜு பெயரில் 17/10/2018 அன்று வாங்கப்பட்டது . அந்த பத்திரத்தில் காசிராமன் சாட்சி கையெழுத்து போட்டிருக்கிறார் . வேறு யார் போட்டார்கள் என்று தெரியவில்லை . இந்த பத்திரம் உண்மையானதல்ல மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல . பிரதிவாதி, பிரதிவாதி கணவர் மற்றும் ராஜு ஆகியோர் நண்பர்கள் என்றால் ஒரே தெருவை சார்ந்தவர்கள் . அவர்கள் ஒரே தெருவை சேர்ந்தவர்கள் நண்பர்கள் என்பதால் சேர்ந்து வியாபாரம் செய்தார்கள் என்றால் சரியல்ல . ராஜு எனக்கு அண்ணன் . நாங்கள் ஒரே வீட்டில் தான் வசிக்கிறோம். ராஜுவும் பிரதிவாதியின் கணவர் ஜீவானந்தமும் சேர்ந்து நிறைய வியாபாரம் செய்தார்கள் என்றால் சரியல்ல . அவ்வாறு பிரதிவாதியின் கணவரின் வியாபாரத்திற்காக கடன் வாங்கி தருவதாக சொல்லி பல வெற்று பேப்பர்களிலும் பத்திரத்திலும் பிரதிவாதியிடமும் அவரது கணவரிடமும் வாதி கையொப்பம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல . வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே எத்தனை வழக்குகள் நடைபெற்று வருகிறது என்றால் தெரியாது . அதை பொறுத்து என் அண்ணனை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் ஆமாம் . தாவா சொத்தின் அசல் பத்திரம் என்னிடம் இல்லை . எங்களிடம் கொடுக்கவில்லை . கிரய அக்ரிமெண்ட் பதிவு செய்யப்படவில்லை . கிரய அக்ரிமெண்ட் உண்மையாக

ஏற்பட்டிருந்தால், அசல் பத்திரத்தை பெற்றுக்கொண்டு , கிரைய அக்ரிமெண்டை பதிவு செய்திருப்போம் என்றால் சரியல்ல . வா.சா.ஆ.1 ஆவணம் நானும் என் அண்ணனும் சேர்ந்து பொய்யாக தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல . 25/12/2018 அன்று நானும், என் அண்ணன் மற்றும் சாட்சி காசிராமன் ஆகியோர் பதிவு செய்து கொடுக்க சொல்லி பிரதிவாதி வீட்டில் போய் கேட்டோம் . மறுபடியம் 2019, 20 ஆம் தேதி ஜனவரி மாதம் போய் கேட்டோம் . நாங்கள் மூன்று போரும் அப்போம் போனோம். அவ்வாறு பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரி. அவ்வாறு நாங்கள் போகவேயில்லை என்பதால் தான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல . 24/08/2019 இல் வாதி பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினார் . பணமே வாங்கவில்லை என்று பதில் கொடுத்துள்ளார். அவ்வாறு பதில் அறிவிப்பு வந்த தேதி நினைவில்லை . பதில் அறிவிப்பே கொடுக்கவில்லை என்று சொல்லியிருந்தால் அதை பற்றி தெரியாது . பிரமாண வாக்குமூலத்திற்கு விவரம் நானும் என் அண்ணனும் சொன்னோம். தாவா சொத்து 25.1/2 குழிக்கு மொத்தமாக 14,10,000/- ரூபாய் என்று பேசியது . குழி கணக்கில் பேசவில்லை . கிரைய அக்ரிமெண்ட் தேதியில் ஒரே நாளில் பணம் கொடுக்கப்பட்டது. நகைகளை அடகு வைத்து கடன் வாங்கி கொடுத்தோம் . 17 ஆம் தேதி தான் நகைகளை அடகு வைத்தோம் . நகை அடகு வைத்த சீட்டை தாக்கல் செய்யவில்லை. நகைகள் முடிந்துவிட்டது. பேங்கில் அதை வரவழைக்கலாம் . 10 லட்சம் ரூபாய் முன் தொகையாக கொடுத்து ஏன் சுவாதீனம் பெறவில்லை என்றால் வீட்டில் பிரதிவாதி குடியிருந்தார் . முழு தொகையும் கொடுத்து , கிரையம் பதிவு செய்த பின்னர் தான் சுவாதீனம் பெறமுடியும் . அவ்வாறே ஒரு அக்ரிமெண்டே ஏற்படவில்லை என்பதால் தான் சுவாதீனம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல . தாவா சொத்திற்கு பின்னால் என் அண்ணனிடம் 5 ஏக்கர் நிலம் உள்ளது என்றாலும் அதை பிளாட் போட்டு விற்பதற்காக பிரதிவாதியிடம் 10 அடி மேற்கு புறம் இடம் கேட்டு கொடுக்காததால் பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொழி மரத்தை இடம் கொடுக்காததால் வெட்டப்போய் எங்களுக்குள் பிரச்சினை நடந்தது என்றால் சரியல்ல . பிரதிவாதியின் கணவர் இறந்த பிறகு தான்

இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் ஆமாம் . பிரதிவாதியின் கணவர் உயிருடன் இருக்கும் வரை எந்த பிரச்சினையும் செய்யாமல் அவர் இறந்த பிறகு பிரதிவாதி பெண் என்பதால் அவர் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல . பிரதிவாதிக்கு தாவா சொத்தை தவிர வேறு வீடோ , மனையோ இந்த தெருவில் உள்ளதா என்றால் தெரியாது . எங்களிடம் பணம் 10 லட்சம் வாங்கி , இடம் வாங்கியுள்ளார். எங்கே வாங்கியுள்ளார் என்று சாட்சிக்கு தான் தெரியும் . எனக்கு தெரியாது. பிரதிவாதி எங்களிடம் பணம் வாங்கவும் இல்லை , இடம் வாங்கவும் இல்லை என்றால் சரியல்ல . தாவா சொத்தை தவிர வேறு வீடோ , மனையோ பிரதிவாதிக்கு இல்லை என்றாலும் , தாவா சொத்தை விற்க வேண்டிய அவசியமும் இல்லை என்றால் சரியல்ல . பிரதிவாதி 3 ஆம் நபரிடம் தாவா சொத்தை விற்க முயன்றதாக சொல்லியிருக்கிறேன். அது யார் என்று தெரியுமா என்றால் யார் என்று தெரியாது. விற்க போவதாக கேள்வி பட்டேன் . சாட்சி காசிராமனை தான் கேட்கவேண்டும். என்னிடம் நேரடியாக சொல்லவில்லை. பிராதில் காசிராமனிடம் சொன்னதாக சொல்லவில்லை என்றால் சரி . என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இரண்டு வழக்கின் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. தாவா சொத்தில் பிரதிவாதி அனுபவத்திலும் சுவாதீனத்திலும் நாங்கள் இடையூறும் செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரியுள்ளார் என்றால் நாங்கள் எந்த இடையூறும் செய்யவில்லை. அவ்வாறு அவர்கள் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் நாங்கள் இடையூறும் செய்யக்கூடாது என்றால் சரி. அவ்வாறு உத்தரவு போடுவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரி . மேற்கு புறம் பொழியில் உள்ள மரங்களை வெட்டக்கூடாது உத்தரவு போடுவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் மேற்கு புறத்தில் மரமே இல்லை . தாவா சொத்திற்கு மேல் புறம் எனக்கு இடம் உள்ளது. மேற்கு புறத்தில் தென்னை மரங்கள் உள்ளது என்றால் அவர்கள் இடத்திற்குள் உள்ளது . பொழியில் இல்லை. பொழியில் இதர மரங்கள் உள்ளது என்றாலும் நான் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . வழக்கின் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லப்பட்ட தேதிகள் முற்றிலும்

பொய்யானது என்றால் சரியல்ல . பிரதிவாதி வழக்கு போடுவதற்கு முன்னர் பிரச்சினை யாரால் வந்தது என்றால் பிரச்சினையே வரவில்லை . பிரச்சினை வந்தது உண்மை என்றால் சரியல்ல . பிரச்சினை வந்ததால் தான் பிரதிவாதி வழக்கு போட்டார் என்றால் சரியல்ல . வாதி பிரதிவாதிக்கு இடையே எந்த வித பண பரிமாற்றமும் ஏற்படவில்லை என்றாலும் வெற்று பத்திரத்திலும் வெற்று தாள்களிலும் பெறப்பட்ட கையெழுத்து வைத்து மோசடியாக இந்த கிரய ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . ஆவணமே மோசடியானது என்பதால் கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் , கிரயத்தை பதிவு செய்ய கோரி பல்வேறு தேதிகளில் பிரதிவாதியை கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல . எனவே நான் கோரும் ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கோரும் மாற்று பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.